செய்தி வெளியீடு எண்:060 நாள்: 28.01.2017

## செய்தி வெளியீடு

புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் பங்கேற்ற தமிழகத்திற்கு மூன்றாவது பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கான பரிசு மற்றும் சான்றிதழை இன்று (28.1.2017) இந்திய இராணுவ முகாமில் அமைந்துள்ள ராஷ்டிரிய ரெங்குசாலா கலையரங்கில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மத்திய இராணுவ இணை அமைச்சர் டாக்டர் சுபாஷ் பாமரே (Dr. Subash Bhamre) அவர்கள் வழங்கினார்கள்.

புதுடெல்லியில் 26.01.2017 அன்று நடைபெற்ற குடியரசு தினவிழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் பங்கேற்க மத்திய அரசு முன்னேற்பாடு செய்த பாதுகாப்புத் துறை உயர்மட்டக் குழு நடத்திய கூட்டத்தில், இந்திய அளவில், மொத்தம் 28 மாநிலங்கள் கலந்துகொண்டன. அதில் 17 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்கள் மட்டுமே அலங்கார ஊர்தி அணிவகுப்பில் கலந்துகொள்ள குழுவால் தேர்வு செய்யப்பட்டது. இதில் தமிழ்நாடு அரசின்அலங்கார ஊர்தியும் ஒன்றாகும்.

26.1.2017 அன்று நடைபெற்ற அணிவகுப்பில் பங்கேற்ற அலங்கார ஊர்திக்கு முதல் பரிசு அருணாச்சலபிரதேசத்திற்கும், இரண்டாம் பரிசு திரிபுராவிற்கும், மூன்றாம் பரிசு தமிழ்நாடு மற்றும் மஹாராஷ்டிரா மாநிலத்திற்கும் வழங்க குழுவால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் பரிசு பெற்ற தமிழ்நாடு அரசு அலங்கார ஊர்தியானது, தமிழ்நாட்டின் தலைசிறந்த நாட்டுப்புற நடனங்களுள் ஒன்றான **கரகாட்டத்தை** மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. இவ்வலங்கார ஊர்தியில் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட அம்மன் சிலை முன்பு 12 பெண் நடனக் கலைஞர்களும், 6 ஆண் நடனக் கலைஞர்களும் இடம்பெற்று, கிராமியப் பாடலுக்கேற்றார்போல் நடனமாடியது பார்வையாளர்கள் அனைவரையும் மிகவும் கவர்ந்து, மகிழ்வித்தது. மிகச் சிறப்பாக அனைத்து மக்களையும் கவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அலங்கார ஊர்திக்கு அகில இந்திய அளவில் மூன்றாம் பரிசு

கிடைக்கப் பெற்றது தமிழகத்திற்கு பெருமை சேர்ப்பதாகும். இதற்கு முன்பும், 26.01.2014—ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற அலங்கார ஊர்தி அணிவகுப்பில் தமிழ்நாடு அலங்கார ஊர்தி இரண்டாம் பரிசு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அலங்கார ஊர்தியில் கலந்து கொண்டு பரிசினை பெற்ற மாநிலங்களுக்கு, பரிசு வழங்கும் விழா இந்திய இராணுவ முகாமில் அமைந்துள்ள ராஷ்டிரிய ரெங்குசாலா கலையரங்கில் இன்று (28.1.2017) நடைபெற்றது. இவ்விழாவில் அலங்கார ஊர்தி அணிவகுப்பில் அகில இந்திய அளவில் மூன்றாவது பரிசு பெற்ற தமிழ்நாடு அரசு அலங்கார ஊர்திக்கான பரிசு மற்றும் சான்றிதழை, மாண்புமிகு மத்திய இராணுவ இணை அமைச்சர் டாக்டர் சுபாஷ் பாமரே (Dr. Subash Bhamre) அவர்கள் வழங்க, தமிழக அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் திரு.உல.ரவீந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**வெளியீடு: — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**